உளி- 1 | ஓசை-80 | ஜனவரி-2024 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

ஐ.தர்மசிங் - 4
மகிழினி காயத்ரி - 5
கலைச்செல்வி - 6
மு.முபாரக் - 6
நயினார் - 7
கோ. பாரதிமோகன் - 8
தி.கலையரசி - 9
கதிரவன் வீ - 10
லாஸ்யா - 10
அ.சீனிவாசன் - 11
க.ராஜகுமாரன் - 12
சாய் மீரா - 13
து.பா.பரமேஸ்வரி - 14
ஜா.பிராங்க்ளின் குமார் - 15
ஜோதி சரண் - 16
கருவை ந.ஸ்டாலின் - 17
பூங்கோதை கனகராஜன் - 17
செ.வீரமணி - 17
ரிஸ்கா முக்தார் - 18
தீபிகா சுரேஷ் - 19
முகில் நிலா தமிழ் - 20
நா.கி.பிரசாத் - 21
சுயம்பு - 22
முகமது பாட்சா - 23
வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் - 24
நேசன் மகதி - 24
மகேஷ் சிபி - 25
நா.வே.அருள் - 26
ஏ.நஸ்புள்ளாஹ் - 27
தங்கேஸ் - 28
சாமிகிருஷ் - 29
முகில் சிவராமன் - 30
விஜி கல்யாணி - 31
அபூ சுகந்தன் - 32
எஸ்.பி.வீரப்பன் - 32
ஆர்த்தி விஸ்வநாதன் - 33
இரா. மதிராஜ் - 33
மணவை லைவின் - 34
ஷபானா ஆதம்லெப்பை - 35
கா.ரஹ்மத்துல்லாஹ் 36
சுப்பையா கந்தையா - 37
கண்ணன் புலமி - 37
அ.ஈடித் ரேனா - 37
ச.ஆனந்தகுமார் - 38
பிரபுசங்கர் க - 39



வீழ்ந்த மழையை
மேகத்திலும்
வழிந்த கண்ணீரை
விழியிலும்
கறந்த பாலை
மடியிலும்
உதிர்ந்த பூவை
செடியிலும்
கடந்த நதியை
மலையிலும்
மீண்டும் சேர்ப்பதில்
வலிமையான விஞ்ஞானம்
ஒருவேளை
வெல்லக்கூடும்

அறிவியலுக்கே
வசப்படாத அதிசயம்தான்

முகத்திலிருந்து
நழுவிய பின்
மீட்டுவிட முடியாத
உனது
மெல்லிய வெட்கம்...

**ஐ.தர்மசிங்**



முத்தமிட்டு கொள்ளுங்கள்
உங்கள் துயரங்களை

துயரங்களைச்
சுமக்கும்
உங்கள் பாடுகளை

பரிதவிப்பின்
பொழுதுகளை

தாயை
அணைக்கும்
சேய் என
முத்தமிட்டு கொள்ளுங்கள்

இதுவரை இழைத்த
பிழைகளையும்
தவற விட்ட
வாய்ப்புகளையும்
காலாதீதத்தின்
கணக்குகளையும்

இதழோரம்
துளிர்க்கும்
புன்னகையுடன்
முத்தமிட்டுக் கொள்ளுங்கள்

உங்களை
நீங்கள்தான்
இரட்சிக்க முடியும்
உங்கள் துயரங்களின்
நதி செல்லும்
பாதையில்
சற்றேனும்
குளத்தில்
பூ ஒன்று மலரக்கூடும்

மகிழ்வின்
பறவை
இறகுகள்
நனைய
சிலிர்க்கலாம்

குழந்தையொன்று
முகம்கொள்ளா
புன்னகையுடன்
திரும்பிப்பார்க்கலாம்

அன்பின் கதவுகள்
இப்படித்தான்
அதிசயமாகத்
திறக்கும்

ஆகவே முத்தமிடுங்கள்
இந்நொடியின்
துயரங்களை
துயரங்களை
சுமந்த பாடுகளை
ஒரு நதியைப்போல

**✲ மகிழினி காயத்ரி**

# நிதானித்திருக்கலாம்....



சரியாக மூடப்படாத கதவின் வழி
சட்டென்று பறந்துவிடுகிறது காதல்பறவைகள்
இரண்டு.

இப்போது
வானம் பெரியது
வானம் அழகானது
வானம் புதியதும் கூட

ஆனால் சதுரம் சதுரமாய் பறந்து பழகின
பறவைவைகள் தான் பாவம்

✣ **கலைச்செல்வி**

எல்லோரும்
இங்கு மழையைப் பற்றி
பேசிக்கொண்டிருக்கிறார்கள்,
மழையைப் பற்றி எழுதிக்கொண்டிருக்கிறார்கள்,
நனைந்துகொண்டிருக்கிறார்கள்,
நனையாமலிருக்க இடம்
தேடிக்கொண்டிருக்கிறார்கள்,
மழையைப் போற்றிக்கொண்டிருக்கிறார்கள்,
மழையை
தூற்றிக்கொண்டிருக்கிறார்கள்,
மழை எல்லா இடங்களிலும்
இருக்கிறது...
வேறு வேறு
மனநிலையில் உள்ள மனிதர்களுடன்!

✣ **மு.முபாரக்**



இரவென்பது வேறொன்றுமில்லை
உன் நினைவுகளின்
ஊர்வலம்

இரவென்பது வேறொன்றுமில்லை
என் தூக்கம் தேடும்
உன் கனவு

இரவென்பது வேறொன்றுமில்லை
நான் மேய்க்கும்
உன் மௌனம்

இரவென்பது வேறொன்றுமில்லை
நான் சுமக்கும்
உன் பார்வை

இரவென்பது வேறொன்றுமில்லை
ஒருத்தியான உன்னை
என் உணர்வுகளுக்கு பொருத்தமாக
பல கோணங்களில்
நான் உற்பத்தி செய்யும்
கவிதை தொழிற்சாலை

**✲ நயினார்**



சொட்டச் சொட்ட
மழையாடியவனின் கூதலுக்கு
சொக்கப்பனைச் சுடர்த்தும் நட்சத்திரங்களை
முகத்திலேந்தியிருந்தாய்

உன் கூந்தல் பூக்களில் இடறி
வானத்தில் விழுந்தவன்
கிளைகள் இல்லாத விழுதுகள் பற்றி
முகடு ஏறுகிறேன்

என் பாய்மரத்தை
திசை செலுத்தும் காற்றை
உன் நெஞ்சுக்கூடு அருள்கிறது

பனிகழுவிய கனிகளை தானம் கொண்டு
பசியாறிய களைப்பிற்கு
விரிகிறது நின் பொன்மடி

வளைவில் நீந்த முனைந்து
சுழியில் சிக்கி
நான் மூச்சிரைத்து மூழ்கியதையெல்லாம்
ஒரு சூரியக்கீற்று சுருட்டிப்போனதில்
நாளின் மீது
அத்தனைப் பிணக்கு எனக்கு

**✲ கோ. பாரதிமோகன்**



சிகரத்தில் நீ...
பாதாளத்தில் நான்...
உன்னை அடைவதற்கு
பாசக்கயிற்றை வீசுகிறாய்.

நீ ரகசியங்களில் ஒளிந்திருக்கிறாய்
உன்னைக் கண்டெடுக்கும் போது
என் காதல் அம்பலமாகி விடுகிறது.

எனக்குள் எரியும் நெருப்பு
காதல்
நீதான் அணைக்க வேண்டும்.

அருவியின் ஓசை நீ
அடிநிலத்தின் மௌனம் நான்.
முரண்களின் இசை
நம் காதல்.

மண்ணில் மணம்போல்
என்னில் இருக்கிறாய்
காதல் வேர்ப்பிடிக்கும் வரை
கண்ணீரைப் பூக்கும் என் கஸல்.

**தி.கலையரசி**

# பாத சுவடுகள்



கோழி சீண்டிய இடத்தில் தவறின் குறியீடுகள்

மாடு போன வழித்தடத்தில் பிளவுபட்ட இரண்டு
பிறை நிலா

யானை கடந்த வழித்தடத்தில் சிறு
உயிர்களுக்கான நீர் தொட்டி

மனிதன் நடந்த வழித்தடத்தில் புல்லும்
முளைக்காத ஒற்றையடி பாதை

**✲ கதிரவன் வீ**

நினைவுக் குளக்கரையில்
பட்டுப்போன மரக்கிளையின்மேல்
சலனமில்லா நீர்ப்பரப்பை
கண்ணிமைக்காமல்
பார்த்துக்கொண்டே இருக்கிறேன்
எங்கிருந்தோ வந்த
பறவை மீனைக் கொத்திப் பறக்கையில்
அலையாடுகின்ற நீர்ச்சுழியில்
நிழலாடுகின்றன எனக்கான உண(ர்)வு ....!!

**✲ லாஸ்யா**



காடுகள் எரிந்தன
விலங்குகள் எரிந்தன
விளைநிலங்கள் எரிந்தன.
சுதந்திரம் எரிந்தது.
சமத்துவம் எரிந்தது.
சகோதரத்துவம் எரிந்தது.
சகிப்புத்தன்மை எரிந்தது.
மனிதம் எரிந்து கொண்டிருக்கிறது.

நீரோ பிடில் வாசித்துக் கொண்டிருந்தான்.
நீங்கள் கவிதை வாசித்துக்
கொண்டிருக்கிறீர்கள்.
நான் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

மனிதன் எரிவான்.
நீங்கள் எரியும் வரை கவிதை வாசித்துக்
கொண்டிருப்பீர்கள்.
நான் எரியும் வரை கவிதை எழுதிக்
கொண்டிருப்பேன்.
நீரோவும் தான் சாகும் வரை தான் பிடில்
வாசித்துக் கொண்டிருந்தான்.

எனக்கு தேனீர்
கிடைத்து விட்டது.

**அ.சீனிவாசன்**

# கஸல்



நீ மூடுபனி
நான் அந்திக்குள்
செல்லும் காலை

என்
இல்லையில் இருக்கும்
உள்ளும் புறமும் நீ

தூரத்தில் தெரியும் புள்ளி
உன்னை கண்டடையும்
பாதை நீண்டபடியிருக்கிறது

துயரத்தின் மெழுகை ஏற்றிவைத்திருக்கிறேன்
எந்த காற்றிலும் அணையவே இல்லை

காற்று நீ
உன் கண்ணுக்கு தான்
நான் தெரியவே இல்லை

**✲ க.ராஜகுமாரன்**

# எனக்குப் பிடாரி என்று பெயர்



எத்தனை துணிகளை
போட்டிழுத்து
மறைத்த பின்னும்
எங்கேனும்
தெரிகிறதாவென
தேடும் கண்களுக்குச்
சொல்லி வைத்திருக்கிறேன்
எனக்குப் பிடாரி என்று பெயர்

பிஞ்சென தெரிந்தும்
பிணியுடம்பை
அடக்க வழியற்று
அறம் தவறும்
ஆண்மையை எங்கேனும்
காணக்கூடின்
அங்கேயும் சொல்லிவைத்திருக்கிறேன்
எனக்குப் பிடாரி என்று பெயர்

நாகரீகமெனவும்
நானும் சரி நிகரெனவும்
போலிச்சுதந்திரம் அணிந்து
போகத்தில் போதமுற்ற
பெண்மையை
அறியுமிடத்தும்
அழுந்தச் சொல்லி வைத்திருக்கிறேன்
எனக்குப் பிடாரி என்று பெயர்

பிறள் மனை
எனவறிந்தும்
பிழை பொருத்தி
அவன் அணுகி
சிதை கொழுத்தி
சிறு குடும்பக் கூட்டை
கலைத்துத் திரியும்
காதலெனும் உடைதரித்த
காலக்கூத்தாடிகளிடத்திலும்
சொல்லி வைத்திருக்கிறேன்
எனக்குப் பிடாரி என்று பெயர்

எனக்குப் பிடாரி என்று பெயர்

**சாய் மீரா**



வளைவுகளில் பிரியமான
நத்தை மீன் விறால் பாசி
கூழாங்கல்
வெள்ளத்தில் அடித்து வந்த மரப்பட்டை
என எல்லாமும் தான் அந்த நதியின்
ஸ்நேகங்கள்..

எது எப்படி அதன் பந்தமாயின
அது அத்தனையும் அதன் சொந்தம்..
எதற்கும் அந்த நதியிடம் பாசாங்கு இல்லை.
தன்னை மெய்சிந்த வைத்த அனைத்தும் அதன்
ப்ரீதியின் பக்கங்கள்...

அரவணைத்து தான் கூடிப் பேசி கலகலத்தது..
நதிக்குள் விழுந்த ஜீவிதங்கள் தான்
பாராமுகமாகப் பார்க்கின்றன.

எப்போது வேண்டுமானாலும்
கோடை வரலாம்..
நதி கரைந்து தரைத் தட்டலாம்..
இப்போதும் நதி தனது கரம் இரண்டையும் நீட்டி
மண்டியிடுகிறது
அனைத்து உறவுகளையும்...

**✤ து.பா.பரமேஸ்வரி**



நான் பார்த்தேன்
நீ அவசரமாய்
மறைக்கும் முன்னான
சொல்லை

நான் பார்த்தேன்
துடைக்கும் முன்னான
உன் கண்ணீரை

நான் கேட்டேன்
சப்தத்தினூடே கேட்காதென
நீ சொல்லிய
அந்த வார்த்தையை

நான் ஒலியற்று
வாயசைத்தேன்
நீ விரும்பிய
ஒரு சொல்லை..

நீ புன்னகைத்தாய்
ஒளித்த
எல்லா சொற்களிலிருந்தும்
மறைத்த
எல்லா கண்ணீரிலிருந்தும்

**ஜா.பிராங்க்ளின் குமார்**



தூது செல்ல ஒரு தோழியாய்
முதலில் மனதோரம் பறந்தது பட்டாம்பூச்சி
அடுத்து மழை தோகை விரிக்கச் செய்தது மயில்
தெரிவு செய்தேன்
உன்னைத்தான் கிளியே!!

பாவை நோன்புக்கு நீராட நேரமில்லாவிட்டாலும
நீர்நிலைகள் காப்போம்!!

நெகிழ்ந்து அவன் நாமம் சொல்ல மறந்தாலும்
நெகிழிப் பயன்பாடு குறைப்போம்!!

கயல் துள்ளும் குளம் அழியோம்
வண்டுறங்கும் குவளை கொய்யோம்!!

மாதம் மும்மாரி இல்லை என்றாலும் பேரிடர்
இல்லாமல்
உலகம் காக்க வேண்டும் என்று
உலகளந்தவனிடம் சொல்லடி
எம்பாவாய்!!

**✧ ஜோதி சரண்**



காற்று வீசுகையில்
பக்கங்களைப் புரட்டுவது போலவே இருக்கிறது
அலைகள் இரைச்சலோடு
ஓடி வருகையில்
கடல் புத்தகமாகிறது

**✣ பூங்கோதை கனகராஜன்**

எல்லாருக்குள்ளுமிருக்கிறது
உடல் நிறைய நஞ்சு
எல்லாருக்குள்ளுமிருக்கிறது
மனதளவு அமிழ்தம்
எல்லாருக்குள்ளும் இருக்கிறது
மிடறு வரை தாகம்
யார் கைகளில் இருக்கிறது
கைப்பிடி தண்ணீர்.

**✣ கருவை ந.ஸ்டாலின்**

விரட்டுவதற்குத்தான்
அத்தனை சன்னல்களை
அத்தனை கதவுகளை
அடைத்து தாழிட
வேண்டியிருக்கிறது

வரவேற்பதற்கு
சிறு புன்னகையே
போதுமானதாகிவிடுகிறது

**✣ செ.வீரமணி**



ஒருவரை ஒருவர் மதித்துக்கொண்டு
ஒருவருக்காக ஒருவர் இறங்கி வந்து
ஒருவரின் வலிகளை இன்னொருவர்
ஆற்றிக்கொண்டு
ஒருவருக்கான இடைவெளிகளை ஒருவர்
கொடுத்துக்கொண்டு
நான் நீ என்பதாகவே இருந்திருக்கலாம்
நாம்

இப்போது
எல்லாமே குழப்பமாகி விட்டன

யாருக்காக யார் விட்டுக்கொடுப்பது
யார் கண்ணீரை யார் துடைப்பது
யார் கனவுகளை யார் சுமப்பது
யார் வாழ்வை யார் வாழ்வதென
எதுவுமே புரியவில்லை

நான்
நீ
என்றிருந்தவரையில்
எல்லாம் சரியாகவே இருந்தன

நாமாகிப் போன பின்புதான்
இத்தனை குழப்பங்கள்
இத்தனை வாக்குவாதங்கள்
இத்தனை வருத்தங்கள்
இத்தனை தூரங்கள்

நான்
நீ
என்பதாகவே இருந்திருக்கலாம்

இன்னும்
நான்
நீ என்றிருந்தவரையில்
காதலை
ஒரு சிறு பிள்ளையென
நெஞ்சோடு
சேர்த்தணைத்துக்கொண்டிருந்தோம்

நாம் என்றாகிய இந்நாட்களில்
அதை
ஓர் இரப்பர் பந்தென
மாறி மாறி இருவரும்
எட்டி உதைந்துக்கொண்டிருக்கிறோம்
பார்

**✲ ரிஸ்கா முக்தார்**



உனதறிவில்லாமல்
கண்மை தொட்டு
கடமைகள் வரை
எல்லாம்
உனக்கு பிடித்ததாக
மாற்றிக் கொள்கிறேன்
சந்தோசமாகவே

ஏனோ
உன்னை பிடிக்குமளவு
உனக்கு பிடித்த என்னை
பிடிப்பதில்லை
எனக்கு.

✲ **தீபிகா சுரேஷ்**



நான் நினைவில் இருக்கும்படி
அது அத்தனை மேன்மைதாங்கிய
சொல் ஒன்றும்  இல்லை..
என்னை மறந்து போ..
நான் மறந்து போவதற்காகவே
இப்போது வரை பழக்கப்பட்டவள்
அதன் துயரத்தை விழுங்கிச் செரித்து
உயிர் வாழப் பழகியவள்..

சின்ன சொல்லுக்கெல்லாம்
உருகி எனைத் தேடி வராதே
என் கோடிக்கணக்கான சொற்கள்
குப்பை போல குவிந்த மனங்கள் உண்டு
அவர்கள் என்னை நினைவில் வைத்திருக்க
அதில் எந்தச் சொல்லும்
உபயோகப்படவில்லை..

வேண்டாம் இனி எந்த சொல்லுக்கும்
யாரும் என்னை நினைவில்
வைத்திருக்க வேண்டாம்
நான் மறக்கப்படுதலை பழகியிருக்கிறேன்..
ஊசி குத்தும் போது வரும் வலிபோல
அதை சகிக்க பழகியிருக்கிறேன்
என் இரவுகளுக்கெல்லாம்
அதுதான்  வாதையும் போதையும்..

எப்போதோ வழிப் போக்கில்
ஒரு சொல்லை உனக்குத் தந்திருந்தேன்
அந்த ஒரு சொல்லை
பிடித்துக் கொண்டு
என்னை நினைவில்
வைத்திருப்பதாய் சொல்கிறாய்..

என்னை தொலைத்து விட்டு நான் யாரெனத்
தெரியா இடங்களில்
வலம் வரவே விரும்புகிறேன்..
வேண்டாம் உன் நினைவடுக்கிலிருந்து
என்னை மொத்தமாய் அழித்தொழி

**முகில் நிலா தமிழ்**



சுவத்துல ஆணி
அடிக்கக்கூடாது!
பத்து மணிக்கு கேட்டை பூட்டிடுவோம்!
நாலு நாளைக்கு
ஒருதடவை
நல்லதண்ணி!
டூ வீலரை வெளியாதான் நிறுத்தனும்!
சத்தமா டீவி
வைக்கக்கூடாது!
உறவினர்கள் இரவு தங்கக்கூடாது!
என
நீண்டுகொண்டேபோன நிபந்தனைப் பட்டியல்
ஆழமாய் தோண்டிப்போட்டது
சகல வசதிகளுடன் கூடிய ஓர் விஸ்தாரமான
அழகிய
வீட்டிற்கான
ஓர் வலுவான
அஸ்திவாரத்தை!

**நா.கி.பிரசாத்**



நான்கு சுவர்களில்லாத வீடுதான்
அவளால்தான்
பறக்க முடியவில்லை

நிறைந்த பந்தியில்
காவலிருக்கிறது இலையெடுப்பவளின் பசி

பிள்ளை வளர்ந்ததும்
நிர்கதியற்றது
தாய், தந்தையரின் வானம்

மகன் விரல் நீட்டாத போது
கிழம் நட்ட மரத்திலிருந்து
கைத்தடியானது ஒரு கிளை

அழுவது எனக்கொன்றும் புதிதல்ல
அது வெளியுலகம் அறியாமல்
கழுவி விடுகிறது மழை

இறந்த அம்மா
இன்னும் புன்னகை மாறாமல்
புகைப்படத்தில்

விளக்கெரிந்தும்
இருட்டாகவே இருக்கிறது
ஏழை குடிசை

மாதக் கடைசியில்
வந்து தொலைக்கிறது
நாலு வீடு தள்ளிய மாலா அக்காவிடம் கடனாய்
கேட்கிறாள்
ஒரு நாப்கின்

அம்மா வேலை செய்யும் வீட்டிலிருந்து வாங்கி
வருவாள்
கிழிந்த பழைய சேலைகள்
மூன்று பெண் பிள்ளை உள்ள
ஏழை வீட்டில்
எப்போதும் வாய்க்குமா என்ன?
பஞ்சு அட்டை

எத்தனைமுறை கழுவினாலும்
போவதில்லை
பேருந்து நெரிசலில்
வக்கீர ஆண்கள் உரசிய தடங்கள்

**சுயம்பு**

# இருப்பதும் இல்லாததும்

.



இருக்கின்ற ஒன்றைத்தான்
அவர்கள் இல்லையென்று பேசிக்
கொண்டார்கள்.
இல்லாத ஒன்றையும் சிலர்
இருப்பதாகக் காட்சிக் கூட்டுவதும்
வியப்பில்லை.
நான் இருப்பென்று நினைப்பவர்கள்
ஒரு நாள் இல்லையென்று உணரும் போது ,
இல்லையென்பதுதான்
எப்போதுமே இங்கு இருப்பென்று
உணரக்கூடும்.
இருக்கின்றவற்றையெல்லாம்
இல்லையென்பவை
ஒரு நாள் விழுங்கிவிட்டால் அன்று
இல்லாதவை இல்லாதுப் போனாலும்
ஏதோவொன்று
இருக்கத்தானே செய்யும்.

.

**முகமது பாட்சா**



யாராவது
கோலம் போடுவார்களெனும்
நம்பிக்கையில்
புள்ளி வைத்துச் செல்லும்
மார்கழிப் பனியெனவே தான்
என்னோடு பேசும்போதெல்லாம்
அப்புறம் அப்புறமென
ஒற்றை வார்த்தையோடு
நீ முடித்துக்கொள்கிறாய்
மற்ற வார்த்தைகளனைத்தையும்
நானே பேசி முடிக்கிறேன்
நீயென்னை
அப்புறப்படுத்தாமலிருக்க வேண்டி...

**✣ வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**

நாட்காட்டியை
வாங்கியவன்
காலத்தின்
ஒரு துளியைக்கூட
விலை பேச
முடிவதில்லை!

**✣ நேசன் மகதி**



மழையில் நனைந்து
ஏறக்குறைய எல்லா புகைப்படங்களும்
நமுத்திருந்தன

கரையான் தின்றது போக
மீந்திருந்தன
சில புகைப்படங்கள்

காலத்தின் வெளிச்சம் பட்டு
சில புகைப்படங்கள்
மங்கலாகியிருக்கின்றன

மண் அகற்றிப் பார்த்தேன்
ஒரு புகைப்படத்தில்
மணப்பெண் வெட்கப்பட
மாப்பிள்ளை தாலி கட்டுகிறார்

அடுத்தடுத்து
தம்பதிகளோடு உறவினர்கள் நிற்கும்
புகைப்படங்கள்

வெவ்வேறு தோரணைகளில்
மணப்பெண்ணும் மணமகனும் இருக்கும்
புகைப்படங்கள்

எனக்குப் பகீரென்றது
ஏனென்றால்
இப்போது தான்
முதன் முதலாய்
ஒரு திருமண ஆல்பத்தை
சாலையோரம் பார்க்கிறேன்

✲ **மகேஷ் சிபி**

# 2024 என்பது வெறும் எண்கள்



கடவுள்கள் பேசிக் கொண்டிருந்தது
விநோதமாக இருந்தது
ஒரு கடவுளின் மேனி உலோகத்தாலானதும்
ஒரு கடவுளுக்குக் கல் உடம்புமாகவும் இருந்தது.
வாயசைக்காமலேயே
வார்த்தைகள் உதிர்ந்து கொண்டிருந்தன.
கூர்ந்து கேட்டதில்
நீண்டுகொண்டிருந்தது...
மனிதர்களைப் பற்றிய
கடவுள்களின் புகார்ப்பட்டியல்.
பேராசைப் பெட்டியாகிப்போன இதயம்
பொய்கள் புரண்டு தேய்ந்துபோன நாக்கு
மனித மாமிசங்களைக் கடித்திழுத்து
ஆடுகின்ற பற்கள்.
காற்று மண்டலத்தைப் பதுக்கிவைத்து
இற்று நைந்துபோன நுரையீரலென
அப்படியொரு அழுகல்.
பணத்தின் நாற்றமடிக்கும் சாக்கடைத்
தொட்டியில்
நெளியும் புழுக்களால்
சிறகுகள் உதிரும் பட்டாம்பூச்சிகளின்
தற்கொலைகள் பற்றி
பேச்சு நகர்ந்தது.
புத்தாண்டு கொண்டாடுவதற்காக
இசிஆர் சாலைப் பப்புக்குப் போகும்
அவசரத்திலிருக்கும்
எனக்கு
கடவுள்களின் பேச்சு ஒரு பொருட்டல்ல....
வாகனத்தை முடுக்கினேன்
பின்னாலிருந்து லாவகமாய் என்
இடுப்பை வளைத்து நெருக்கியமர்ந்தாள் என்
தோழி.

✲ நா.வே.அருள்

# அலைகள் கடவுளின் ஓவியம்.



பெரும் கடல் முக்கும்
அலைகள்
மணலில் முத்தத்தை
அப்புகின்ற கணங்களில்
மகள் ஒரு வெட்டுக் கிளியைப் போல
மணலில் துள்ளி அலைகளுடன்
வாழ்கிறாள்.
கடலின் ஆழம் அபாயமானது என்று
சொல்லி வைத்திருக்கும் நான்
மகளிடம்
அலைகள் கடவுளின்
அற்புதமான ஓவியமென்றும்
சொல்லி வைத்திருக்கிறேன்
அதனால்தான்
கடற்கரை செல்லும்
எல்லா தருணங்களிலும்
அவள் அலைகளை
நெஞ்சில் வைத்துச் சுமக்கிறாள்.
அவளது கால் தடங்களை
அலைகள் பல சந்தர்ப்பங்களிலும்
அழித்துவிட்ட போதும்
அவள் அலைகளுக்கு முத்தங்களை
நிராகரித்ததில்லை.
கடலின் மைய நீரில் இருந்து
அலைகளை கட்டி இழுத்து வரும்
காற்றை  அவள் காதலிக்கிறாள்
மகளை நான் காதலிக்கிறேன்
எந்த அப்பனுக்குதான் பிடிக்காது
தனது குழந்தையின் குறும்புத் தனம்.

✲ ஏ.நஸ்புள்ளாஹ்.

# சந்தை



ஏதேன் தோட்டமாக இருந்த பூமி
சபிக்கப்பட்ட வனமானது
ஆதாமின் வாரிசு
ஆப்பிள்களை சந்தைப்படுத்த
ஆரம்பித்த பிறகு தான்

மனிதர்கள் வாரிசுகளை
விட்டுச்செல்வது போது
பாம்புகளும் வாரிசுகளை
விட்டுச் செல்ல ஆரம்பித்தன

பல்கிப் பெருகிய அவைகள்
அவசரத்திற்கு ஒளிந்து கொள்ள
இடமில்லாமல்
மூளைக்குள் ஓடிவந்து
ஒளிந்து கொண்டன

சமயங்களில் முதலாளிகளின்
புன்னகைகளில்
ஒளிக்கீற்றுகளாகவும்
அரசியல்வாதிகளின்
மணிக்கட்டுகளில்
ஆபரணங்களாகவும்

அதிர்ச்சியில் தற்காலிகமாக
ஊமையாகிப் போன புனிதர்கள்
யாவற்றையும் மௌன சாட்சியாக
பார்த்துக்கொண்டிருக்கும் போதே
பூமி நெட்டி முறித்து புரண்டு படுக்க
ஆசைப்படுகிறது

கார்ப்பரேட் அதை
ஒரு போர்வையாக
சுருட்டி
கடலுக்குள் கொண்டு செல்ல
எத்தனிக்கிறான்

இந்த முறை வராக உருக்கொண்டெல்லாம்
அவர் வரவேண்டியதில்லை
இதை நாமே தடுத்துவிடலாம் என்று
தோழர்  நமது கரங்களை எடுத்து
ஒன்றாக கோர்க்க ஆரம்பிக்கிறார்

பூமி முன்னெப்போதையும் விட
அசுர வேகத்தில் சுழல
ஆரம்பிக்கின்றது

**✲ தங்கேஸ்**

# பூமழையில் மலர்பவள்



மலர் கிழியாது
பெய்யும் மழையில்
ஒரு பூவென நனைகிறாய் நீ
ஒரு பூவை மலர்த்துவது
காற்றின்
கை பக்குவம்போல்
ஒரு பூவை நனைப்பது
மழையின் இதயமறிந்த இதம்
கூந்தல் உலர்த்துவதாய்
நீ உருவாக்கும் காற்று
மொட்டு மலர கச்சிதமானது
நனைந்த கூந்தல் வழியும் மழை
மலர் நனைய போதுமானது
ஒரு பூவை நனைக்க வந்த மழையில்
நீ நனைவது எத்தனை பொருத்தமானது
நனைந்த மலர்
மழைத்துளியின் பாவனையில் உதிர்கிறது
உன்னை நனைத்துவிட்ட மழையோ
ஒரு பூவைப்போல
மலர்ந்து கிடக்கிறது

✲ **சாமிகிருஷ்**

# பாசக் கொடி
# பற்றிக் கொள்வோம்...



நீ எனக்குள் வந்த
அந்த ஒரு நொடியிலிருந்து
என் தேகவொளி
கூடி விட்டதாகக் கூறுகிறார்கள்
ஆம்! அது என்
பூரிப்பின் வெளிச்சம்

என் நொடி பொழுதை
நூறாக கூறிட்டால்
அத்தனை கூறிலும்
குறையாமல் நீயே
என் நினைவென
இருக்கிறாய்

என் உணவு என் உடை
என் உறைவிடம்
அனைத்தையும் உனக்காகவே
தீர்மானிக்கிறேன்
இனி என் உயிரும்
உணர்வும் கூட நீ

இதுவரை உணர்ந்திடாத
தனி பெரும் உணர்வு நீ
உன் முகம் காணக் காத்திருக்கிறேன்
தேனெனப் பாயும் உன்
குரல் கேட்கவும் தான்...

இப்படி இருப்பாய்
அப்படி இருப்பாய் என
எப்படி எப்படியோ உனக்கு
உருவம் கொடுக்கிறேன்
என் மடிதாங்குகிறேன்
மார்போடு அணைக்கிறேன்

இப்போதெல்லாம்
நான் யாருடனும்
பேசுவதில்லை என்கிறார்கள்
உன்னோடு பேசுவதற்கே
என் மொத்த நேரம்
போதவில்லையே...

தனித்து நான்
இருக்கும் பொழுதெல்லாம்
தனியாக இருப்பதாக
சொல்பவர்களிடம்
இனி நான் தனியாள்
இல்லை என மெருகேற
உரைக்கிறதென் பெண்மை

உன்னால் வரப்போகும்
தூங்காத இரவுக்கு
ஒத்திகையும் பார்க்கிறேன்
நீ தரப்போகும் தொல்லைகளுக்கு
ஏங்கித் தவிக்கிறேன்

மேவிய என் வயிறு
மெல்லயிறங்க எலும்பு
விலகும் உயிர்
வேதனையிலும்
உன்முகங் காணும்
முனைப்பில் களிப்புடன் காத்திருக்கிறதென்
தைரியத் தாய்மை....

உந்தித் தள்ளி
வெளி வா மகளே
தொப்புள் கொடியறுத்தக்
கையோடு பாசக் கொடி
பற்றிக் கொள்வோம்....

✤ **முகில் சிவராமன்**

# வலிக்காமல் ஒரு கவிதை



வியர்ப்பில் பூத்த
நாசியின் ஒற்றைக்கல்
ஒளிக் கற்றையில்
தோன்றுகிறதடி
உனக்கான எனது வரிகள்..

மின்னல்
கீற்றுப் பார்வையில்
மேகம் வெடித்து
சாரல் கொட்டும்
என் காதலே..

துளிர் விட்ட
பிரியம் ..
தரிக்காது தாங்கிப்
பிடிக்கும்..
உள்ளங் கையளவு
சதைப் பிண்டம்..

யோசித்து யோசித்து
எழுதிய வரிகள்...

யாசிக்கிறது
மை சிந்திய
சொட்டுகள்..

எத்தனை
முறையடிப் பெண்ணே !
உனக்கு விக்கல்
வந்ததென..

✲ **விஜி கல்யாணி**



கைப்பேசி
நிரப்பி வைத்திருக்கும்
அத்தனை
முகபாவனை பொம்மைகளும்
அவள் முகஅகராதியின்
முதல் பக்கம் மட்டுமே
மற்றவற்றை
பதிப்புரிமை வாங்கிவைத்து
அவள் மட்டுமே
பயன்படுத்திக்கொண்டிருக்கிறாள்.

**அபூ சுகந்தன்**

உனக்குப் பிடித்த மோர்க்குழம்பு
உனக்குப் பிடித்த உருளைக்கிழங்கு மசாலா
உனக்குப் பிடித்த சேமியா பாயசம்
நீ அடுக்கியபோது கடுப்பாகத்தான் இருந்தது!
நான் எங்கோ இருக்கிறேன்
நீ எங்கோ இருக்கிறாய்
எனக்குப் பிடித்ததை வைத்து
நீ என்ன செய்வாய்!
உன்னை நினைத்து
ஒரு வாய் சாப்பிடுவேன்
உன்னை நினைத்து சிரிக்கும்போது
உன்னை நினைத்து அழும்போது
சாப்பிட மட்டும் கூடாதா!

-

**எஸ்.பி.வீரப்பன்**



ஒற்றை பார்வையில்
ஒற்றை வார்த்தையில்
அவள்
காதலைச் சொல்ல

புன்னகைத்தபடி
விண்ணைத் தொட்டு
மண்ணில் வந்து
அவள் கரம் பிடித்து

காதலனாக
கணவனாக
அவளுக்குள் ஒன்றியவன்
உடலால் மட்டும் தான்
இறந்தவன்.

**✣ ஆர்த்தி விஸ்வநாதன்**

அந்த பழைய ஆண்டை
முடிக்க,
மாதங்கள்,
வாரங்கள்,
நாட்கள்,
அல்ல
ஒரு நொடியால்
மட்டுமே முடிகிறது தான்
மிகப் பெரிய ஆச்சரியம்...

**✣ இரா. மதிராஜ்**



ஒரே ஒரு சூரிய
குளியலில்
வெளுத்தது உலகம்

மரத்தில் வழியும்
மழை நீரில்
வழுக்குகிறது கம்பளி பூச்சி

மதம் இல்லாதவரை
மதம் பிடிக்கவில்லை
மனிதனுக்கு

முடியில்லாதவனை
தலைவார அழைக்கிறது
அரசாங்க வேலை

கடல் இறங்கா கட்டுமரம்
முழுவதிலும் நிறைந்திருக்கிறது
மீனவனின் பசி

பக்கத்து வீட்டு குழம்பு வாசனையை
எடுத்து வந்தது
காற்று

ஆசாரியின் பட்டறையில்
தன் கூட்டை தேடுகிறது காக்கா
கூடவே நிற்கிறது குயில்

குளிப்பதற்காகவே
குடை பிடிக்கிறது
காளான்

காற்று மூங்கிலை புல்லாங்குழலாக்கியது
புல்லாங்குழல் காற்றை
இசையாக்கியது

**மணவை லைவின்**



இன்று மட்டுமே எமக்குறியது

இன்று என்னோடு உறவாடும் நீ
நாளை உன் உறவை முறித்துக்
கொள்ளலாம்

இன்று எம்மோடு பயணிப்போர்
நாளை பாதி வழியில்
இறங்கியும் விடலாம்

இன்று நமக்குப் பிடித்த ஒன்று
நாளை பிடிக்காமலும் போகலாம்

இன்று எனக்குப் பிடித்தக்
கவிதைப் புத்தகத்தை நாளை நான்
தொலைத்தும் விடலாம்

அவ்வாறே
நாளை நமக்கானதல்ல
அதில் நடப்பது நடக்கட்டும்
இன்று நம்மோடு இருப்பதையும்
இன்று நம்மோடு பயணிப்போரையும் நலமாகப்
பார்த்துக்கொள்வோம்
நாமும் நலமாக இருப்போம்

நாளை எப்போதும்
நிரந்தரமில்லை

நாளை வருகிறேன் என்பதில் கூட
நாளை இருந்தால் வருகிறேன்
என்பதுதான் மறைந்திருக்கிறது...

**✲ ஷபானா ஆதம்லெப்பை**



சந்தேகமில்லை
நீங்கள் கழுகை நோக்கித்தான்
கல்லெறிகிறீர்கள்.
குறி தவறியக் கற்களெல்லாம்
நிலத்தில் நிற்பவர்களைத்தான்
மீண்டும் மீண்டும் காயப்படுத்துகின்றன.

கொஞ்சம் நிதானியுங்கள்.
நீங்கள் மீண்டும் கற்களைத் தேடும்
இடைவெளியில்
கோழிக்குஞ்சைத் தூக்கிக்கொண்டு
மேலே சென்றுவிட்டது கழுகு.

உங்களுக்கு
கோழிக்குஞ்சுகளைப் பாதுகாக்கவும்
தெரியவில்லை
கழுகைத் தடுக்கவும் தெரியவில்லை.
கோபத்தில்
உயரப்போயிருக்கும் கழுகைப்பார்த்துக்
குரைத்துக்கொண்டிருந்த நாயின் மீது
கையிலிருந்தக் கல்லை வீசுகிறீர்கள்.
தாய்க்கோழியின்
கொக்கரிப்பை மறந்துவிட்டீர்கள்.
ச்சீய்...
இவ்வளவுதான் நீங்கள்

அந்தப் பிச்சைக்காரன்
எங்களைப் பார்த்துக்
கத்திக்கொண்டிருக்கிறான்.
எல்லோருக்கும் எப்படியோ!
எனக்குச் சுட்டுவிட்டது.
வைத்திருந்தக் கற்களைக் கீழே
போட்டுவிட்டேன்.

**✣ கா.ரஹ்மத்துல்லாஹ்**

# தன்மை



வானம் மூடிக் கொண்டதும்
மனம் மேடு நோக்கி விரைகின்றது
பய வெள்ளம்...

-

✣ **கண்ணன் புலமி**

கவி பாடுகிறது
கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும்

புறப்பட்டது மிதக்கும் தன்மை கொண்ட
பறவையிடமிருந்து என்பதால்
வானிலிருந்து வந்த இறகு
தொபுக்கடீரென விழாமல்
மிதந்து மிதந்துதான் பூமி வந்தது

✣ **சுப்பையா கந்தையா**

அவதாரங்கள்
சில எடுக்கிறேன்

அரிதாரங்கள்
பல பூசிக்கொள்கிறேன்.

அத்தனையும் மீறி
எட்டிப்பார்த்து விடுகிறேன்
“நான்”

✣ **அ.ஈடித் ரேனா**



தடக்கென நடந்த சின்ன மாறுதலில் எனக்கும்
சேர்த்து சுவாசிக்கத் தொடங்கினாய்..

சுமந்து கொண்டு நடக்கையிலும்
உயிர்பிரிக்கும் வலியிலும்
பல்கடிதத்து தவமிருந்தாய்
முகம் காண களிப்பு சுமந்தாய்

குப்புற விழுகையிலும்
முதன்முறை நிற்கையிலும்
கைகள்தட்டி விருதுகள் அறிவித்தாய்..

பிறந்தது முதல் காலத்தை
எனக்காகத் தாரை வார்த்தாய்..

என் வெற்றிகளின் உயிர்ப்பு
தோல்விகளின் கண்ணீர்
பதட்டமடைகையில் துடிக்கிற மனசு
என நானாய் மாறிய பிரதி நீ

அம்மாக்களை ஒரு கவிதைக்குள்
அடக்கிவிட முடியும் என்கிற
என் அறியாமையையும்
எப்போதும் போல் மன்னித்து விடு..

**ச.ஆனந்தகுமார்**

# ஊர் திருவிழாவும் இளையராஜாவும்



இரண்டு பெரிய குழாய் ரேடியோக்களை
ஒலி தீபங்களாய்
ஊர் கோயில் கோபுரத்தின் மீது
ஏற்றி வைப்பது திருவிழா தொடங்குவதற்கான
முதல் அறிகுறி
வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும்
ஆடியோ கேசட்டுகளில்
தேர்ந்தெடுத்து பதிந்த பாடல்களில்
பெரும்பாலும் இளையராஜாவே
மொட்டை தலையுடன் வீற்றிருப்பார்
கண்மணி அக்கா
கிணற்றடிக்கு வரும்போதெல்லாம்
குடகு மலை காற்றில்
வரும் பாடல் கேட்குதா??
ஒலிக்க விடுவார் ரவி அண்ணன்
முகமுழுக்க மஞ்சள் பூசி
வரும் சாந்திக்கு
ஏய் வஞ்சிக்கொடி
என் மஞ்ச செடி வந்ததடி!!.
இது ரமேஷ் மாமா
சுற்றி நிகழும் அத்தனை லீலைகளையும்
கண்டும் காணாதது போல்
மூக்குத்தி ஒளிர அமர்ந்திருப்பாள்
திருவிழாக்காரி காளியம்மன்....

**பிரபுசங்கர் க**

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

சென்னையின் மைய பகுதியில்

# படைப்பு அரங்கம்

## Facilities

- Capacity 90 to 100 (Members)
- AC Hall
- POP with Profile Lights
- Tea/Coffee snacks place
- Projector

இலக்கிய நிகழ்வுகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்




**முகவரி**

படைப்பு குழுமம்
#3, Ground Floor,
Ajantha Tower,
Corporation Colony Street,
Kodambakkam, Chennai
Opp: R2 Police Station

**+91 73388 97788 / 73388 47788**

padaippu | admin@padaippu.com | www.padaippu.com